# Emanin Unmayai Nee Arivaya?

## Those who accept the concept of this book are all Murthaths.

**The verdict of the All Ceylon Jamiathul Ulama Fathuwa committee [Colombo Sept, 15]**

There are many contradicting thoughts in this book about the Islamic Shariath particularly, against the principle of Oneness of being.

Hence the author and those who testify this concept are considered to have deserted Islam "Murthath". The "Fathuwa" committee of All Ceylon Jamiathul Ulama has decided to issue this verdict.

The above decision was taken at the meeting of the Fathuwa committee of Ulama Board held at the Colombo Colpetty Jummah Mosque. The Ulama Board has published a report in this regard which states;

Competent Ulamas have submitted their opinion to the Jamiathul Ulama Fathuwa committee after reading the book "Emanin Unmayai Nee Arivaya" published by M.S. M. Abdullah (Pailvan) of Maruthamunai

A unanimous decision was taken to deliver the following verdict when this book was taken for clarification on 10.09.1989 at the All Ceylon Jamiathul Ulama Fathuwa Committee meeting held at the Colpetty Jummah Mosque.

There are many contradictory thoughts in this book "Emanin Unmayai Nee Arivaya"against the Islamic Shariath, particularly with Islamic principles of Oneness of being.

Some are as follows:

- One who attributes Kalimah to "Allah as the one who is to be worshipped" is a Mushrik
- There is none to worship other than Allah is the principle of Mushrik.
- It is diametrically opposed to Quran and Hathees to believe that only Allah is worthy of worship

- Allah and other statues are equal and one
- Statues, Dogs, Pigs, Excrements are all Allah
- Allah and Rasool are not separate "Allah and his prophet Rasool (Sal) are one"
- Rasool (Sal) was well aware that all statues (Ilahu) are Allah
- "Allah and his creations are one" is diametrically opposed to the meaning of the Kalima "La Ilaha Illallah Mohammthur Rasoolallah

Expressing an incorrect interpretation to Kalimah will have the effect of "Rithath" is the judgment of Shariath. Hence the author who declare this concept as correct and those who endorse this view are considered having deserted Islam (Murthat).

They will be accepted as Muslims again if they repent and ask for forgiveness from Allah for their misconception.

The detailed Fathuwa published by the All Ceylon Jamiathul Ulama under the title "The intrusion into the principles of Oneness of being" when A.J. Abdul Rauf of Kathankudy published the wrong thoughts in the book Emanin Unmayai Nee Arivaya in the year 1979 is appropriate to this book too.

It is so stated in a statement issued by Moulavi A.J.M. Riyal the General Secretary of the All Ceylon Jamiathul Ulama.

---

The above advertisement published in the Thinakaran and Thinapathy of 15/09/1989 and 16/09/19089 respectively is reprinted at the Ilampirai Press Marudamunai and issued on 22/09/1989 by the General Secretary A.M. Hassan Moulvi of Maruthamunai Jamiathul Ulama Committee

"ஈமானின் உண்மையை நீ அறிவாயா?"

# என்ற நூலை எழுதியவர் கருத்தை

## ஏற்பவர் அனைவரும் "முர்தத்துகள்"

### அ. இ. ஜ. உலமா சபையின் பத்வா குழு தீர்ப்பு

கொழும்பு, செப். 15

''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மாற்றமான பல கருத்துக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இஸ்லாத்தின் ஏகத்துவக் கொள்கைக்கு முரணான கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

எனவே இந்த நூலை எழுதியவரும் இவரின் கருத்துக்களை சரியானவை என்று கூறுபவர்களும் இஸ்லாத்தைவிட்டு நீங்கியவர்கள் (முர்தத்துகள்) ஆவர். இவ்வாறு தீர்ப்புவழங்க அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் ''பத்வா'' குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பு. கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் கூடிய உலமா சபையின் பத்வா குழுக் கூட்டத்தில் பிரஸ்தாப நூல் விடயமாகவும் ஆராயப்பட்டபோதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக உலமாசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மருதமுனையைச் சேர்ந்த எம். எஸ். எம் அப்துல்லாஹ் (பயில்வான்) என்பவர் வெளியிட்டுள்ள ''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலை தகுதி வாய்ந்த உலமாக்கள் பலர் படித்து விட்டு தமது கருத்துக்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பத்வாக் குழுவுக்கு சமர்ப்பித்திருந்தார்கள்.

10 - 09 - 89 இல் கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பத்வாக் குழு கூட்டத்தில் மேற்படி நூல் பற்றி ஆராயப்பட்டபோது பின்வரும் தீர்ப்பு வழங்குவதென ஏகமானதாக முடிவு செய்யப்பட்டது.

''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மாறான பல கருத்துக்கள் குறிப்பாக இஸ்லாத்தின் ஏகத்துவக்கொள்கைக்கு முரணான கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

அவற்றுள் சில

- எவன் ஒருவன் வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ் மட்டும் தான் என கலிமாவுக்கு பொருள் கொள்கிறானோ அவன் முஷ்ரிக்காகும்.
- வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பது முஷ்ரிக்கீன்களின் கொள்கையாகும்.
- வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மட்டும் என்று ஈமான் கொள்வது குர்ஆன் ஹதீஸ்களுக்கு நேர்மாறானதாகும்.
- அல்லாஹ்வும் ஏனைய விக்கிரகங்களும் ''சமம்'' ஒன்றேதான்.
- விக்கிரகங்கள், நாய், பன்றி, மலசலம் யாவுமே அல்லாஹ்தான்.
- ''அல்லாஹ் வேறு றசூல் வேறு அல்ல'' அல்லாஹ்வும் அவனது தூதரும் ரசூல் (ஸல்) அவர்களும் ஒன்றுதான்.
- எல்லா விக்கிரகங்களும் (இலாஹ்) அல்லாஹ்வேதான் என்பதை ரசூல் (ஸல்) அவர்கள் திட்டமாக அறிந்திருந்தார்கள்
- அல்லாஹ்வும் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட படைப்புகளும் ஒன்றே என்பது ''லாயிலாக இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலில்லாஹி'' என்ற கலிமாவுக்குரிய கருத்துக்கு நேர்மாறானதாகும்.

கலிமாவுக்கு இது போன்ற தவறான விளக்கம் கூறுவது 'ரித்தத்' தை விளைவிக்கும் என்பது ஷரீஅத்தின் தீர்ப்பாகும். எனவே இந்நூலை எழுதியவரும் இவரது கருத்துக்களை சரியானவை என்று கூறுபவர்களும் இஸ்லாத்தை விட்டு நீங்கியவர்கள் (முர்தத்கள்) ஆவர்.

இவர்கள் தமது தவறான கருத்துக்களையிட்டு வருந்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக்கோரி கலிமா சொன்னால் மீண்டும் முஸ்லிம்களாக ஏற்றுக் கொள்ளப்படுவர்.

''ஈமானின் உண்மையை நீ அறிவாயா?'' என்ற நூலில் இடம்பெற்றுள்ள தவறான கருத்துக்கள் 1979 இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ. ஜே. அப்துல் றஊப் என்பவரால் வெளியிடப்பட்ட போது அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினால் 'ஏகத்துவக் கொள்கையில் ஊடுருவல்' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட விரிவான பத்வா மேற்படி நூலுக்கும் பொருந்தும்.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவி